# Biograhy of Karakatta Artists of Thanjavur District

**Ms. K. Chitra Devi**
*Assistant Professor, Department of Tamil*
*Karpagam Academy of Higher Education, Coimbatore*

**Abstract**

*Among the various traditional art forms, Karakattam is one of the most important. Karakattam is a traditional art form of the Tamil people. This art form is performed prominently in various parts of Tamil Nadu. However, in the present day, this art form is slowly fading away due to social media. The Karakattam artists are also struggling to make a living. The Tamil Nadu government should provide various welfare schemes to the Karakattam artists and take steps to improve their livelihood. Furthermore, by creating awareness among the people about the importance of the Karakattam art form, it should be revived, and opportunities should be created for Karakattam artists not only in the Thanjavur region but also in other parts of Tamil Nadu, giving them a new lease on life.*

***Keywords:*** *Revival, Karakattam, Culture, Artist, Folk art, Film, Livelihood*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18981708

**References**

1. Ramanathan, A. Dr., Folk Arts, Manivasagar Pathippagam, Chidambaram, 1982.
2. Alagappan, A., Shadow Arts, Kazhaga Veliyeedu, Chennai, 1973.
3. Tamilavan, Folk Arts, Sarvodaya Ilakkiya Pannai, Madurai, 1979.
4. Natarajan, T., A Study of the Lifestyle of Karagattam Artists, Madurai Kamaraj University, Madurai, 1990.
5. Gunasekaran, K.A. Dr., Kuravan Kurathi Aattam, Tamil University, Thanjavur, 2005.
6. Puliyur Kesikan, Silappathikaram (Commentary), Pari Nilayam, Chennai, 2017.
7. Field study data of Karagattam artists in Thanjavur District.

# தஞ்சாவூர் மாவட்ட கரகாட்டக் கலைஞர்களின் வாழ்வியல்

***திருமிகு கு. சித்ராதேவி***
உதவிப் பேராசிரியர், மொழிகள் துறை - தமிழ்ப்பிரிவு
கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர்

***ஆய்வுச் சுருக்கம்***
*இயல், இசை, நாடகம் எனும் முக்கலைகளில் ஒன்று கரகாட்டக்கலை. கரகாட்டக்கலை தமிழர்களின் பாரம்பாரியக் கலை ஆகும். இக்கலை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் சிறப்பாக நிகழ்த்தப்படுகிறது. இருப்பினும் தற்காலத்தில் சமூக ஊடகங்களினால் இக்கலை மெல்ல மெல்ல மறையத்தொடங்கியுள்ளது. கரகக் கலைஞர்களும் தம் வாழ்விழந்துத் தவிக்கிறார்கள். கரகக் கலைஞகளுக்கு தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வழிவகைச் செய்ய வேண்டும். மேலும், கரகாட்டக் கலையின் முக்கியத்துவத்தை மக்களிடையே விழிப்பிணர்வு ஏற்படுத்தி, மறுபடியும் மீட்டுருவாக்கம் செய்து தஞ்சாவூர் பகுதியை மட்டுமல்லாமல், தமிழகத்தின் மற்றப் பகுதிகளிலும் கரகாட்ட கலைஞர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வழிவகை செய்ய வேண்டும்.*

***திறவுச் சொற்கள்:*** *மீட்டுருவாக்கம், கரகாட்டம், பண்பாடு, கலைஞா, நாட்டாண்மை, திரைப்படம், வாழ்வாதாரம்*

***முன்னுரை***

நாட்டுப்புற இலக்கியம் என்பது இந்த மண்ணின் விலைமதிக்க முடியாத ஒன்றாகும். அந்தந்த காலகட்ட மக்களிடம் உருவான வாழ்வியல் வெளிப்பாடுகள் அம்மக்களின் நாட்டுப்புறக்கலை இலக்கியங்களிலும் அறிய முடிகிறது. நாட்டுப்புறக் கலை இலக்கியங்கள் அந்த மக்களைப் போலவே எளிமையும், தெளிவும், உண்மையும் கொண்டவையாகும். ஒரு வளர்ந்த சமூகத்தில் ஆடல், பாடல் போன்ற கலைகள் வெறும் பொழுதுபோக்காக மட்டுமல்லாது அந்தச் சமூகத்தின் அடையாளமாகவும் திகழ்கின்றன. ஒரு இனத்தின் மரபியல் சார்ந்த பண்பாடுகள் இவ்வகைக் கலை அடையாளங்கள் மூலமாகவே வெளியுலகிற்கு தொரிய வருகின்றன. அந்த வகையில் தமிழாரின் பாரம்பாரிய கலை அடையாளம் "கரகாட்டம்" என்ற நாட்டுப்புற நடனக்கலை ஆகும்.

கரகாட்டம் என்பது ஒரு தெய்வீகக் கலை. இது தமிழர்களின் பாரம்பாரியக் கலையும் ஆகும். கிராமிய வழிபாட்டு முறைகளோடு கலந்த இந்த தொன்மக்கலை தமிழகத்தல் சோழர்கள் ஆண்ட தஞ்சையில் தோன்றின. தஞ்சையில் 'கரக செம்பு ஆட்டம்' அழைக்கப்படுகிறது. என்றே இவ்வாட்டம் விரிவடைந்து புதுக்கோட்டை, ராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, சேலம், திருவண்ணாமலை, வேலூா், சென்னை என தமிழகம் முழுவதும்

பரவியதமிழர்களின்பாரம்பாரியக்கலையாக விளங்கி வருகிறது. சோழ மண்டலத்தில் நிகழ்த்தப்பட்டு வரும் இக்கலை நாட்டார் வாழ்வியலில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. "தற்காலத்தில் கரகாட்டமானது நலிவடைந்துக் கொண்டேதான் இருக்கிறது. ஊடகங்கள், தொலைதொடர்பு சாதனங்கள் வருகையினால் நிகழ்த்து கலைகள் மீது மக்களுக்கு ஆர்வம் குறைந்துவிட்டது. மேலும் கரகாட்டக்கலையை நம்பி வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் கீழ்நோக்கியே சென்றுக் கொண்டிருக்கிறது. கல்வி, பொருளாதார, வாழ்க்கை நிலைகளில் இவர்களின் பின்தங்கியே காணப்படுகின்றனர்."

(நடராசன், தி. கரகாட்டக்கலைஞர்களின் வாழ்வியல் - ஆய்வு, ப.99) அவ்வகையில் இக்கட்டுரையில் தஞ்சாவூர் மாவட்ட கரகக் கலைகளின் வாழ்வியலைப் பற்றியும், அவர்களது மேம்பாட்டிற்காக இனி செய்ய வேண்டியவைப் பற்றியும் இங்கு ஆராயப்படுகிறது.

### தஞ்சாவூர்

தஞ்சாவூர் என்பது தமிழகத்தின் ஒரு முக்கியமான நகரமாகும். தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்றும் அழைக்கப்படுகிறது. சோழப்பேரரசின்தலைநாகமாகவும்விளங்கியது. பழமையான கோயில்கள், ஓவியங்கள், கலை, கலாச்சாரம் போன்றவற்றிற்குப் பெயர் பெற்றது. சங்ககாலம் தொட்டே இயல், இசை, நாடகம் எனப் பல கலைகளின் பிறப்பிடமாகவும் அவற்றின் பாதுகாப்பான வளர்ப்பிடமாகவும் தமிழகம் விளங்கியுள்ளது. இதற்கு தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டியர்கள் உறுதுணையாக இருந்ததும் ஒரு முக்கியக் காரணமாகும்.

### கரக கலைஞர்களின் நிலை

"மண், செம்பு, பித்தளை போன்றவற்றால் செய்யப்பட்ட வாய்ப்புறம் குறுகியும், அடிப்பாகம் அகன்றும் காணப்படும் குடம் 'கரகம்' எனப்படும். நீர், அரிசி, தானியம் போன்றவற்றால் நிரப்பி அதன் வாய்ப்புறத்தைத் தேங்காயால்மூடி அலங்காரிக்கப்பட்ட கரகத்தை தலையில் வைத்து அது கீழே விழாதவாறு ஆடும் தமிழான் பாரம்பாரியக் கலை நாட்டுப்புறக் கலையாகும். இவ்வாட்டத்திற்கு நையாண்டி மேளம், சிறிய உடுக்கை, பெரிய உடுக்கை, சத்துக்குழல், செண்டை, பறை, நாதஸ்சுரம், தவுல் போன்ற இசைக்கருவிகள் மூலம் இசைக்கப் படுகின்றன. (தமிழவன், நாட்டுப்புறக் கலைகள், ப.121) தெய்வ வழிபாட்டிற்கு ஆடும் கரகம் 'சக்திக்கரகம்' என்றும், தொழில்முறைக்கரகத்தை 'ஆட்டக்கரகம்' என்றும் அழைக்கப்படுகிறது. கரகத்தின் வடிவமைப்பைக் கொண்டு, மண்ணால் செய்யப்பட்டவை 'தோண்டிக்கரகம்' என்றும், பித்தளையால் செய்யப்பட்டவை 'செம்புக்கரம்' என்றும் அழைக்கப்படுகிறது. கரகாட்டம் பழங்காலத்தில் 'குடக்கூத்து' என்ற கலை வடிவமாக இருந்தது. "வாணன் பேரூர் மறுகிடை நடந்து நீணிலமளந்தோன் ஆடிய குடமும் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. இன்றைய சூழலில் இந்த நடனத்தில், தலையில் கரகத்தை சமநிலைப்படுத்தி ஆடுவதோடு, புதுப்புது உத்தி முறைகளைப் பயன்படுத்தி ஆடி வருகின்றனர். இந்தக் கலையின் அடையாளத்தைப் பாது காக்கும் கலைஞர்கள் குறைந்து விட்டனர்.

"கரகக் கலைஞர்களின் சமூக வாழ்க்கையும் கலை வாழக்கையும் மகிழ்ச்சியான நிலையில் இல்லை. மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்தி ஆடிப்பாடி வாழும் இவர்களது வாழ்க்கையோ கேள்விக்குறியாகவுள்ளது" (கள ஆய்வில் வலங்கைமான் பெரியவேலு கூறியது)

கரகாட்டக் கலைஞர்களை ஊக்குவித்து, மேன்மையான இந்தக் கலையை மீட்டெடுக்க முயற்சிக்க வேண்டுவது நமது கடமையாகும்.

### கல்வி நிலை

கரகக் கலைஞர்கள் கல்வி, தொழில், பொருளாதாரம், சமூகப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் போதிய முன்னேற்றங் காணவில்லை. பெரும்பாலோர் கல்வியறிவு இல்லாதவர்களாகவே இருக்கின்றனர். இங்கு, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர்களில் என்.கே.மகாலிங்கம் ஒருவர் மட்டுமே பள்ளியிறுதி வகுப்பு வரையில் கற்றுள்ளார். மற்றவர்கள் அதற்குக் குறைவாகவே படித்து ள்ளனர். இவர்களுள்சிலர்பள்ளிகளில்படிக்கவே இல்லை. எனவே, கரகக் கலைஞர்களுக்குப் போதிய கல்வியறிவு இருந்தால் அவர்களது கலையறிவிலும் முன்னேற்றம் அடைவர்.

கல்வி அறிவு இன்மையால், அறியாமையின் காரணமாகத் தங்களது கலையறிவை எடுத்து விளக்க முடியவில்லை. எந்தெந்தப் பாடலைப் பாடுகிறோம். எப்படி ஆடுகிறோம் என்பதைக் கூட எடுத்து விளக்கச் சிலரால் முடியவில்லை. இந்நிலையில் ஆய்வுக்காக அவர்களிடமிருந்து செய்திகளைத் திரட்டுவதில் மிகுந்த சிரமம்

ஏற்பட்டது. அவர்களிடையே தம்மைப் பற்றிய தாழ்வு மனப்பான்மை மிகவும் அதிகமாக இருப்பதாகத் தொரிகிறது. தெய்வபக்தி அவர்களிடம் மிகுதியாக இருக்கிறது.

### பொருளாதார நிலை

பொருளாதாரத்தில் மிகவும் பின்னடைந்து இருக்கின்றனர். ஆண்டு வருமானம் மிக்க மாதங்கள் மிகச்சிலவே. மீதியுள்ள மாதங்களில் மிகவும் சிரமமான வாழ்க்கையை வாழ்கின்றனர். குறிப்பாக தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி ஆகிய மாதங்களில் மட்டும் வருமானம் கிடைக்கும். இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள கலைஞர்கள் அனைவரும் மாத வருமானத்தை எதிர்நோக்கி வாழும் தொழிலாளர்களே ஆவர். இவர்கள் பொாியவேலு, மகாலிங்கம் ஆகிய இருவர் மட்டும் பிற தொழில்களை செய்யாமல் முழுக்க முழுக்க இக்கலைத் தொழிலையே நம்பியுள்ளனர். இவர்களுள் பொாியசாமியை தவிர மற்றவர்கள் பெரும்பாலும் வாடகை வசிப்பவர்களாகவே வீட்டில் "பொலியசாமிங் கூட 2015 இருக்கின்றனர். வரையிலும் தையல் தொழிலையே பொாிதும் கவனித்து வந்தார். கடந்த பத்தாண்டுகளில் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்ற வருமானத்தைக் கொண்டு இரண்டு வீடுகளை வாங்கியுள்ளாா்" (கள ஆய்வில் வலங்கைமான் பொயவேலு கூறியது)

"சிறு வயது முதல் இளம் வயது வரை ஆட்டத் தொழிற் ஒன்றையே தொரிந்து வைத்திருக்கும் இந்த வகைத் தொழிற் கலைஞர்களில் மணமான பெண்கள் வேறு தொழில்களைச் செய்யச் செல்வதில்லை. பலர் பாராட்ட ஆட்டம் ஆடிய பெருமையை மனத்துள் நினைத்துக் கொண்டு, ஆட்டம் இல்லாத காலங்களில் பிற கூலி வேலைக்குச் செல்வது மதிப்பு குறைவு என்று கருதிச் செல்லாமல் இருப்பதும், குடும்ப வருமானம் குறைந்து குடும்ப உறவு நிலையில் சிக்கல்கள் ஏற்பட ஏதுவாகின்றன. (அழகப்பன், அறு. நிகழ்த்துக் கலைகள்,ப.67) ரூபாயும், ஆண் "பெண் கலைஞருக்கு 1500 கலைஞருக்கு 2000 ரூபாயும், வாத்தியக்காரர்களுக்கு ரூ.500 லிருந்து 1000ரூபாய் வரையிலும் சம்பளமாகக் கிடைக்கிறது. இதில் அதிகத் தொகையை வாத்தியாா் எடுத்துக் கொள்கிறாா்" (குணசேகரன் கே.ஏ, முனைவர் குறவன் குறத்தி ஆட்டம், ப.75)

கிராமியக் கலைஞர்களின் நலன்களைக் கவனிக்க 'தமிழ்நாடு கிராமிய கரகாட்ட வாத்தியக் கலைஞர்கள் சங்கம்' என்ற ஓர் அமைப்பினை ஏற்படுத்தியுள்ளனர். இருப்பினும் இக்கலைஞர்களிடையே ஒற்றுமை இல்லை (கள ஆய்வில் பட்டுக்கோட்டை கலைஞர் சங்கர் என்பவர் கூறியது)

### பெண் கலைஞர்கள்

"கரகம் ஆடும் பெண் கலைஞர்களில் பெரும்பாலோர் ஆதிதிராவிடர்களாகவே (அரிசனங்கள்) உள்ளனாா்" (கள ஆய்வில் பட்டுக்கோட்டை கலைஞர் சங்கர் என்பவர் கூறியது) பெரும்பாலும் குடிசை வீடுகளிலும், சோரிப்பகுதியிலும் வாழும் இவர்கள் கல்வி வசதி பெறாதவர்களாகவே உள்ளனர். இவர்கள் கவர்ச்சியாக கரகம் ஆடுவதால், தெய்வ பக்தியும் புனிதத் தன்மையும் இக்கரக ஆட்டம் இழந்து விட்டது என்று பழைய ஆட்டக்காரர்கள் வருத்தப்படுகின்றனர். முன்பெல்லாம் தலையிலிருக்கும் கரகச்செம்பை இடையிலே இறக்குவதில்லை ஆனால் இன்று கரகம் ஆடம் பெண்கள் தாங்கள் நினைத்தபோதெல்லாம் கரகச்செம்பை அடிக்கடி கீழே இறக்கி வைத்து விடுகிறார்கள். முன்பெல்லாம் சக்திக்காரருக்கு இருந்த கோயில் மாயாதைகள் எல்லாம் ஆட்டக்காரர்களுக்கும் இருந்தது.

"தற்காலத்தில் பெண்கள் கரகம் ஆடப்புகுந்த பிறகு இம்மாயாதை குறைந்து விட்டதாகக் கூறப்படுகிறது. காரணம் பழைய புனிதத்தன்மைகளைப் பெண் ஆட்டக்காரர்கள் பின்பற்றுவதில்லை. கோயில் விழாக்களில் சாராயம் குடித்துவிட்டு வந்து கரகம் ஆடும் பெண்களுக்கு எப்படி மாாியாதை கிடைக்கும் என்பது பொாியசாமியின் விவாதமாகும்" (கள ஆய்வில்நாகப்பட்டினம், கலைஞர் பெரிய சாமி கூறியது) கரகக்

“கலைத்தொழிலில் சம்பாதித்து வந்த பெண் கலைஞர்களைக் கலைத்தொழில் அல்லாத பிற இளைஞர்கள் திருமணம் செய்ய முன்வருவது குறைவாக உள்ளது. அவ்வாறு திருமணம் நடைபெற்றாலும், திருமணத்திற்குப் பின் பெண் கலைஞர் மீண்டும் கலைத்தொழிலுக்கு விடுவதில்லை. பெண் கலைஞர் விரும்பினாலும் கணவான் அனுமதி கிடைக்கப்பெறுவதில்லை. (கள அய்வில் கும்பகோணம், நாயனக் கலைஞர் மருதமுத்து கூறியது)

மன்னார்குடி, மயிலாடுதுறை, கும்பகோணம் போன்றபோல் குடும்பம், நகரங்களில் நாட்டுப் புறங்களைப் குடும்பமாய் அல்லாமல் தனியாக வந்து கரகாட்டத்தைக் கண்டுகளிக்கின்றனர். முதியோர், இளவட்டப் பெண்கள், வாழ்க்கைத் தரம் உயர்ந்தவர்கள், படித்த இளைஞர்கள் ஆகியோர் இந்நிகழ்ச்சியை பார்க்க முன் வருவதில்லை. ஆடவர்களில் மற்ற இளைஞர்கள் தான் அதிகம் விரும்புகிறார்கள்.

பெண் கலைஞர்கள் ஆடும்போது கேலியும் கிண்டலும் செய்வார்கள். அருகில் போய் அமர்ந்து பார்த்து ரசிக்கிறார்கள். இருக்கும்போது அவர்களுக்கு ரூபாய் நோட்டுகள், பூ மாலைகள், முறுக்கு மாலைகள் ஆகியவற்றை அன்பளிப்பாக அளிக்கின்றனர். இளைஞர்கள் குறிப்பாக பெண் கலைஞர்களின் நெஞ்சுப் பகுதியில் உள்ள அட்டையில் தங்கள் கைகளாலேயே ரூபாய் நோட்டுகளைக் குண்டூசியால் குத்தி அன்பளிப்பு செய்கின்றனர். நாட்டுப்புறங்களில் பார்வையாளர்களைவிட நகரங்களின் பார்வையாளர்கள் பாலியல் உணர்வுடன் ஆடத்தூண்டும் வகையில் அன்பளிப்புச் செய்து ஆட்ட அசைவுகள் இருக்கும்படி செய்து இரசிக்கின்றனர். இத்தொழிலில் ஆடும் பெண்களுக்கு சமுதாயத்திலும், குடும்பத்திலும் மதிப்பு இல்லை. கேவலமான பார்க்கப் படுகிறார்கள். கரகாட்ட கான்ட்ராக்டர் ஆட்டக்கலைஞர்கள் ஆடிக்கொண்டு இளவட்டப் பெண்களை மட்டுமே தேடிப்பிடித்து ஆட வைக்கிறார். ஆபாசமாக ஆடும் பெண்களுக்கு சம்பளம் அதிகமாகவும், ஆபாசமில்லாமல் ஆடும் பெண்களுக்கு சம்பளம் குறைவாகவும் வழங்கப்படுகிறது. பெண்கள் இரட்டை அர்த்தம் உள்ள வசனங்களை மட்டுமே பேச வேண்டும். ஆண்கள் விரும்பும்படி ஆட வேண்டும் என்ற நிபந்தனைகள் முன்கூட்டியே விதிக்கப்படுகின்றன. பெரும்பாலான பெண்கள் மது அருந்து விட்டுதான் ஆடுகிறார்கள்.

எனவே, கரகாட்டக்கலையில் பெண்கள் பல இன்னல்களை சந்தித்தே வாழ்கின்றனர். அவர்களுக்கென்று மாயாதை, மதிப்பு என்று எதுவும் கிடையாது. கண்காட்சிப் பொருளாகப் பார்க்கும் அவல தள்ளப்படுகின்றனர். கரகாட்ட நிகழ்வு நிலைக்குத் என்றாலே தற்காலத்தில் ஆபாச நிகழ்ச்சியாகவே கருதப்படுகிறது.

## குடும்ப உறவு நிலை

கள ஆய்வில் கிடைத்த செய்திகளின்படி, ‘சீசன் நேரம்’ என்று இக்கலைஞர்கள் கூடும் அறுவடைக் காலத்தின் போதும், விதைப்புக் காலத்தின் போதும் இவர்களது குடும்பம் பொருளாதார நிலையில் சீராக உள்ளது. இவர்களது வாழ்க்கை அவ்வப்போது பொருளாதாரச் சூழ்நிலைகளால் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகிறது. சீசன் நேரத்தில் அடிக்கடிப் பல ஊர்களுக்குப் பயணம் செய்தும், பல பெண் கலைஞர்கள் ஆண் கலைஞர்களோடும், பல ஆண் கலைஞர்கள் பெண் கலைஞர்களோடும் கலந்து கலை நிகழ்ச்சிகள் செய்யும் வாய்ப்பு அமைகிறது. இவர்கள் இரவுவேலைகளில் பல இடங்களில் தங்க நோடும் காரணங்களால் ஒழுக்கக்கேடான செயல்கள் ஏற்பட வாய்ப்பாகின்றது. இதனால் குடும்ப உறவில் விரிசல் ஏற்படுகிறது.

“சில இளைய பெண்கள் முதிய ஆண்களைத் திருமணம் செய்து கொள்கின்றனர் (கள ஆய்வில் மல்லிகா கரகக்கலைஞர் பாபநாசம், வயது 22. இவரை திருமணம் செய்து கொண்ட நாயன கலைஞருக்கு 45 வயது) ஏற்கனவே திருமணம் முடித்த ஆடவர் ஆடவந்த பெண்களை வைப்பாட்டிகளாக வைத்துக் கொள்ளவும், சில நேரங்களில் செய்கின்றனர். மறுதாரங்களாக

இக்காரணங்களால் ஆக்கிக்கொள்ளவும் கலைஞர்களின் இயல்பான உறவு நிலைகளில் விரிசல்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இந்த ஆட்டத்தில் இளம் பெண்களே தொழில் கலைஞர்களாக விளங்குவ பெரும்பான்மையாக உள்ளது. இளம்பெண்களின் வருமானத்தில் குடும்பம் நடத்துவதால் குடும்பத்தலைவன் கரகம் ஆடும் தன் மகளை திருமணம் செய்து வைப்பதில்லை. திருமணத்தைத் தள்ளிப் போடுகிறான். உரிய வயதாகியும், திருமணம் பெற்றோரால் தள்ளிப் போடப்படுவதை உணரும் ஆட்டக்கலை இளம் பெண்கள் தாங்களாகவே கணவனைத் தேடிக் கொள்ளும் பொறுப்பினை எடுத்துக் கொள்கின்றனர்.

சில தொழிற் கலைஞர்களது குடும்பங்களில் இருவரோ அல்லது இருவருக்கும் மேற்பட்டவர்களே இணைந்து தொழில் செய்ய வருவதுண்டு. ஏனைய கலைஞர்குடும்பங்களைவிட இது போன்ற குடும்பங்களில் உறவு நிலைக் கொஞ்சம் சுமூகமாகவும், சுமாராகவும் விளங்கக் காண முடிகிறது.

"தொழிற்கலைஞர்களின் குடும்பங்களில் உள்ள குழந்தைகள் பள்ளிக்குச் செல்கின்றனர். எப்படியும் தன் தொழிலைத் தன் பிள்ளைகளுக்குப் பயிற்றுவித்து கஷ்டப்படுத்தக் கூடாது என எண்ணுகின்றனர். சிலர் தம் எண்ணப்படிப் பள்ளிகளில் பிள்ளைகளைச் சேர்ப்பினும் குடும்பத்தின் பொருளாதாரச் சிக்கல் என்ற காரணத்தால், இன்னும் இரண்டு கைகள் உழைத்துப் போட வேண்டும் என்ற வாழ்க்கைத் தேவையால் படிக்கும் பிள்ளைகளையும் கலைத் தொழிலுக்கு இழுத்துப் போடுகின்ற நிலையினை நேரில் கள ஆய்வில் காணமுடிகிறது." (மருதமுத்து (நையாண்டி நாயனக் கலைஞர்) ஒரத்தநாடு இவர் தன் மகளைப் படிக்க வைத்து, இடையில் நாயனக் கலைஞனாகவே ஆக்கியுள்ளார்)

இளவட்டக் கரகக்கலைஞர்கள் காலம் பொறுத்துக் திருமணம் செய்து கொள்வதோ, பொருளாதார நிதியைச் சா செய்து கொண்டு திருமணம் செய்து கொள்வதோ இல்லை.

"பெரும்பாலான தொழிற் குடும்பங்களில் பெண் கலைஞர்களின் பிள்ளைகள் ஆட்டக் கலைஞர்களாகவும் ஆண் பிள்ளைகள் தோலிசைக் கருவிகள், நாயனம் ஆகியவற்றை வாசிக்கும் கலைஞர்களாகவும் உள்ளனர். தொழிற் கலைஞர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருக்கும் குடும்பங்களில் அக்குடும்பங்களில் அக்குடும்பத்தலைவர் அல்லது குடும்ப வருமானத்தை செலவு செய்யும் தகுதி பெற்றவர் ஆட்டத் தொழிலுக்கான இடைத்தரகராகவும் விளங்குகின்றனார் (மல்லிகாவின் தந்தை ஆட்டம் அமைத்துக் கொடுக்கும் இடைத்தரகராக உள்ளார்)

எனவே, கரகத் தொழில் குடும்ப உறவுகளிடையே பரஸ்பர ஒற்றுமையில்லாமல், தன் விருப்பப்படி வாழ்க்கை வாழத் தலைப் படுகின்றனர். இதற்குக் குடும்ப சூழலே முக்கியக் காரணமாக உள்ளது.

**கலைஞர்களின் பழக்க வழக்கங்கள்**

"ஆண் தொழிற் கலைஞர்கள் பொதுவாக வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டை, வெள்ளைத் துண்டு ஆகியவற்றையே அணிய விரும்புகின்றனர். நாட்டுப்புறத் தொழிற் கலைஞர்களான இவர்களின் சமூக மதிப்பை உயர்த்திக் கொள்ள வேண்டிச் செவ்வியல் கலைஞர்களின் நடை, உடை, பாவனைகளைப் பின்பற்றுகின்றனர் (இராஜேந்திரன், ஆண் கரகாட்டக் கலைஞர், புதலூர் கூறியது)

தஞ்சாவூர் வட்டார கரகக் கலைஞர்கள் குறிப்பாக நையாண்டி மேளக் கலைஞர்கள் காவி வேட்டியும் துண்டும் அணிந்து, நெற்றியில் சந்தனப் பொட்டும் குங்குமமும் வைத்துக் கொள்கின்றனர். தன்னை சமூகத்தில் உயர்த்திக் கொள்ளவும்,அடையாளப்படுத்திக்கொள்ளவும் இத்தோற்றத்தில் காட்சியளிக்கின்றனர். தஞ்சாவூர் வட்டார நாட்டுப் புறங்களில் அமைத்துக் நாட்டாண்மைகளையும் கொடுக்க வாய்ப்புத் நிகழ்ச்சி தரும் ஊர்ப்பொரியவர்களையும் இரு கைகூப்பி வணங்குவது வழக்கம். தவிர்க்க இயலாமல் பல இயல்பான நபர்களைச் சந்திக்கும் பொழுது அவர்களுக்கு இருகை கூப்பி

வணங்குவது வழக்கம். தவிர்க்க இயலாமல் பல இயல்பான நபர்களைச் சந்திக்கும் பொழுது அவர்களுக்கு இருகை கூப்பி வணங்கும் வழக்கத்தை இன்றளவும் இக்கலைஞர்கள் கொண்டுள்ளனர். ஆயினும் மூத்த கலைஞர்கள், சொல்லிக் கொடுத்த ஆசான்கள் ஆகியோரைச் சந்திக்கும்போது அவர்கள் தம் கால்களில் விழுந்து வணங்கி ஆசிர்வாதம் பெறுகின்றனர்.

ஆண் கலைஞர்களும், பெண் கலைஞர்களும் பொதுவாக வெற்றிலைப் போடும் வழக்கம் கொண்டுள்ளனர். இவர்களுள் பெரும்பாலோர் புதுக்கோட்டை, தஞ்சாவூர், பட்டுக் கோட்டை, திருச்சி,நாமக்கல், சேலம், ஈரோடு போன்ற பகுதிகளிலேயே காணப்படுகின்றனர். ஆண் கலைஞர்களில் பலர் புகைப்பிடித்தலையும் மது பழக்கமாகக் கொண்டுள்ளனர். அருந்துவதையும் கடைகளில் விலை கொடுத்து வாங்கிக் கொள்ளும் முகப்பூச்சில் பொடிகளைச் சிறு சிறு டப்பாக்களில் அதாவது தகரத்தாலான புட்டிகளில் கலைஞர்கள் வைத்துக் கொள்கின்றனர். ஒப்பனை செய்து கொள்ளப் பயன்படுத்தும் கண்ணாடி, சீப்பு, தேங்காய் எண்ணெய், சோப்பு போன்றபொருள்களைக் கலைஞர்களே தங்கள் பொறுப்பில் வைத்துக் கொண்டு நிகழ்ச்சிகளுக்குச் செல்கின்றனர். ஒப்பனைப் பொருள்களான ஊக்கு, பித்தான், ஜீகினா போன்றவற்றை தங்கள் உடைகளில் பளிச்சிடும் வண்ணம் தாங்களே ஓய்வு நேரங்களில் தைத்துத் தயார் செய்து கொள்கின்றனர்.

கலை நிகழ்ச்சிகளுக்குச் செல்லும் கலைஞர்களின் சம்பளம், போக்குவரத்துச் செலவு இடைத்தரகர் பொறுப்பில் விடப்படும். கலைநிகழ்ச்சி முடிந்ததும் இடைத்தரகராக இருந்தவரோ அல்லது கலைநிகழ்ச்சி பேசி அழைத்து வந்த கலைஞரோ சம்பளத்தைப் பகிர்ந்தளிக்கின்றார். சம்பளம் பகிர்ந்து கொள்ளும் சமயங்களில் சில கலைஞர்களிடையே மனவேறுபாடுகள் ஏற்படுகின்றன.

ஊர் இளைஞர்களுள் சிலர் பெண் கலைஞர்களுக்கு வேண்டிய சலுகைகளைப் பெற உதவி செய்கின்றனர். கலைஞர்களது ஆட்டம் சிறப்பாகஅமையவேண்டிடீ,காபி,குளிர்பானங்கள் போன்றவைகளை இடையிடையே கலைஞர்களுக்கு நிகழ்ச்சி அமைப்பாளர்கள் அளிக்கின்றனர்.

நாட்டுப்புற கரகாட்டக் கலைஞர்களான இந்த ஆட்டக்கலைஞர்களை ஊர்ப் பள்ளிக்கூடம் அல்லது ஊராரால் அமைக்கப்பட்ட கலையரங்கின் இணைப்பில் உள்ள அறைகளில் தங்கிட நிகழ்ச்சி அமைப்பாளர்கள் ஏற்பாடு செய்கின்றனர். நகர்ப்புறங்கள், நகர் சார்ந்த கிராமங்கள் தவிர்த்த கிராமங்களுக்குச் செல்லும் இக்கலைஞர்கள் சாதியப் பார்வையில் குறைந்த மதிப்பில் நடத்தப்படுகின்றனர்.

கலைஞர்கள் தங்களுக்குள்ளே மாியாதை செய்து கொள்கின்றனர். நாயனக் கலைஞர்களை அண்ணா, அம்மா, வாத்தியார் என்றெல்லாம் அழைத்துக் கொள்கின்றனர் கலைஞர்களின் ஈடுபாடு

தஞ்சாவூர் வட்டாரத்தில் கரகாட்டக் கலைஞர்கள் நிறைய பேர் உள்ளனர். இவர்கள் இக்கலையின் மீது அதீத ஈடுபாடு கொண்டுள்ளனர். "ஆட்டக் கலைஞர்களில் இருபாலர் எண்ணிக்கையில் மன்னார்குடி வட்டாரத்தில் சுமார் 20 பேர்கள், கும்பகோணம் வட்டாரத்தில் 250 பேர்கள், மயிலாடுதுறை மாவட்டத்தில் 200 பேர்கள் மற்றும் பிற பகுதிகளிலும் உள்ளனர். இவ்வாறு களப்பணியின் போது தகவலாளர்கள் தந்த கூற்றின் வழி அறிய முடிகிறது (கள ஆய்வில் வரதராஜன், வலங்கைமான் வயது 50)

"பள்ளர், பறையர், வன்னியர் எனப் பல பிரிவினர் இன்று தஞ்சாவூர் வட்டாரத்தில் கரக ஆட்டம் ஆட முன்வந்துள்ளனர்" (கள ஆய்வில் வரதராஜன், வலங்கைமான் வயது 50)

இப்பிரிவினால் பெண்களின் பங்கே பொதும் உள்ளது. இப்பிரிவிலிருந்து வரும் பெண் கலைஞர்களின் குடும்பங்கள் நலிவுற்றிருக்கக் காணலாம் தாழ்த்தப்பட்டகைக்கொண்டுள்ள இக்கலையில் படையாட்சி போன்ற பல பிரிவினரும் வந்துள்ளமையினை சமூகப் பொருளாதார நிலைகளுடன் அகமுடையார், முன் கூடிய ஆய்வு தனித்து செய்யப்பட்ட வேண்டியதாகும்.

மன்னார்குடி, வலங்கைமான் போன்ற இடங்களில் உள்ள நையாண்டி இசைக் கலைஞர்கள் மற்றும் ஆட்டக்கலைஞர்களில் பெரும்பாலோர் கலை நிகழ்ச்சி வேண்டுவோர் எளிதில் கண்டு முன்பணம் அளித்து நிகழ்ச்சி அமைத்திடும் வாய்ப்பினை மனதிற்கொண்டு நகரங்களில் பேருந்து நிலையங்களின் அருகாமையிலேயே வாடகைக்கு அறைகள் எடுத்துக் கொண்டு தங்கியிருக்கின்றனர்.

"நாட்டுப்புறங்களில் சடங்குகளை நிறைவேற்றும் பொருட்டு, சடங்கு முறைக் கலைஞர்களால் கூலிபேசி நிகழ்த்தப்படும் ஆட்டங்களில் மதச்சடங்கு மற்றும் தெய்வ நம்பிக்கை ஆகியவை குறைவாக உள்ளன (துரைசாமி தவில் கலைஞர், பேராவுரணி, வயது 49, கூறியது)

**கரகாட்டக் கலையில் ஏற்பட்டுள்ள சில மாற்றங்கள்**

கரகக் கலைஞர்கள் இசைத்தட்டுகளில் வெளியாகியுள்ள பக்திப்பாடல்களையும் பாடிக்கொள்கின்றனர். விநாயகர், முருகன், சரஸ்வதி போன்ற பெருந்தெய்வங்களின் துதிப் பாடல்களையும் மாரியம்மன் பாடல்களையும் பாடுவதை இன்று அனைத்துத் தொழிற் கலைஞர்களும் கடைபிடித்து வருகின்றனர். தமிழ்த் திரையிசைப் பாடல்களையும் இன்று ஆட்டக் கலைஞர்கள் பாடுகின்றனர். கரகக் கலைஞர்கள் பலர் இன்று 'டிஸ்கோ டான்ஸ்' 'கிளப் டான்ஸ்' சினிமாக்களில் இடம் பெறும் ஆடிக்கொள்கின்றனர். ஆட்டம் ஆகியவை போல்

ஆடும் கலைஞர்கள் இன்று பிளாஸ்டிக் போன்ற பொருளிலிருந்து செய்யப்பட்ட உடை, ஒப்பனைக்கான கைப்பாட்டை, இடுப்புப் பட்டை போன்றவற்றை அணிந்து கொள்கின்றனர். பளபளப்பான மின்னும் ஜிகினாப் பொருளான ஜிமிக்கியை பாவாடை, சட்டைகளில் வைத்து தைத்து, அணிந்து ஆடுகின்றனர். கரகாட்டக் கலைஞர்கள் இன்று திருமணம் ஆனதும் ஆடு களத்தை மறந்து விடுகின்றனர்.

"பெண்கள் கரகாட்டம் ஆடியிருந்தாலும் அவ்வாட்டத்திலிருந்து அல்லது விலக்கி இடைக் காலத்தில் அவர்கள் விலகியிருந்தார்கள் வைக்கப்பட்டிருந்தார்கள் என்று தெரிகிறது. 1940 வரை ஆண்களே கரகாட்டம் ஆடினர். பின்னர் ஆண்களே பெண் வேடமிட்டு ஆடினர். சமீபகாலமாக பெண்கள் கரகாட்டத்தில் முக்கியப் பங்காற்றுகிறார்கள்" (இராமநாதன் அறுமுனைவர் நாட்டுப்புறக்கலைகள், ப.75) என்று குறிப்பிடுகிறார்.

**கரகக் கலையின் நசிவு நிலை**

"முன்பெல்லாம், கோயில் விழாக்களில் மூன்று நாள் நிகழ்ச்சிகளிலும் கரக ஆட்டம் நடைபெறும். ஆனால் தற்காலத்தில் பல கோயில்களில் முதல் நாள் மட்டுமே கரக ஆட்டத்தை நடத்திவிட்டு மற்ற இருநாட்களிலும் இன்னிசை,நாடகம்,திரைப்படம்,பட்டிமன்றம், வழக்காடு மன்றம் முதலிய நிழ்ச்சிகளை ஏற்பாடு செய்து விடுகின்றனர். இதனால் கரக ஆட்டத்தின் செல்வாக்கு குறைந்து வருவதைக் காணலாம்" (கள ஆய்வில் கரகக் கலைஞர் பெரியசாமி, திருவையாறு கூறியது).

தமிழகத்தின் கிராமப்புற நடனமான கரகாட்டத்துக்கு என்றைக்கு விமோசனம் கிடைக்கும் என்பது தொயவில்லை. நாளுக்கு நாள் சீரழியத்தான் செய்கிறதே அன்றி, எந்த மறுமலர்ச்சியும் காண முடியவில்லை.

கரகாட்டம், காவடியாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், தேவராட்டம், பொய்க்கால் குதிரை, மரக்கால் ஆட்டம், ராஜா ராணி ஆட்டம்,புலியாட்டம்,குறவன்-குறத்தி ஆட்டம் என பல கலைகள் ஆட்டக்காரர்களும் சினிமாக்களில் கூட வந்திருக்கின்றன. சினிமாவில் வந்து சென்றிருக்கின்றனர். ஆனால் சினிமா வெளிச்சம் கூட இந்த ஆட்டத்தையோ, ஆட்டக்காரர்களையோ அடுத்தக் கட்டத்துக்குக் கொண்டு செல்லவில்லை. கரகாட்டத்தை மையமாக வைத்து எடுக்கப்பட்ட 'கரகாட்டக் காரன்' திரைப்படம் தமிழ்த் திரையுலகில் பிரபலமானது. ஆனால் அந்தப் படத்தில்

ராமராஜனுக்கு டூப் போட்ட பிரபல நாட்டுப்புற கலைஞரோ தொடர் அவமானங்களால் இந்தக் கலையே வேண்டாம் என கிறிஸ்துவ மதபோதகராகிவிட்டார். கிராமியத் திருவிழாக்களில் நடைபெறுகிற மாசி முதல் ஆடி வரையிலான காலகட்டம் தான் இவர்களின் அறுவடை காலம். அதைக் கொண்டு தான் ஆண்டு முழுவதும் பிழைப்பு நடத்தியாக வேண்டும். பெரும்பாலும் இக்காலகட்டத்தில் எந்தப் பெண்ணும் கர்ப்பம் தாரிப்பதில்லை. அப்படித் தாரித்திருந்தாலும்அதைக்கலைத்துவிட்டுகாலில் சலங்கை கட்டும் கொடுமை இவர்களுக்கு காலங்காலமாக நடந்து கொண்டுதான் உள்ளது.

## அரசின் பாராத் தன்மை

கரகாட்ட கலைஞர்களுக்கு அரசு எந்த சலுகைகளையோ, வறுமானம் ஈட்டுவதற்கேற்ப வாய்ப்புகளையோ தருவதாகத் தொயவில்லை. நாட்டுப்புறக் கலையே பாதுகாப்பதற்கென்றே தமிழக அரசின் கலைப் பண்பாட்டுத்துறையின் கீழ் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் **1959** முதல் இயங்கி வருகிறது. இதன் கீழ் மாவட்டத்திலும் கலைப்பண்பாட்டு மையம் என்று ஆறு மண்டலங்களும் இருக்கின்றன.

ஆனால், அதிகாரிகள் முதல் பணியாளர்கள் வரையில் பணியிடங்கள் பெரும்பாலும் காலியாகவே உள்ளன. துணை அல்லது உதவி இயக்குநர்கள் தான் மண்டல இயக்குநர்களாக ஒப்பேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அலுவலகப் பணியைச் செய்து முடிக்கவே ஆளில்லாமல் தடுமாறும் இவர்கள், வறுமையோடு வாழும் நாட்டுப்புறக் கலைஞர்களைத் தேடிச் சென்று அவர்களுக்குக் கலை நிகழ்ச்சிக்கான வாய்ப்பையும்நல வாரிய உதவிகளையும், தகுதியானவர்களுக்கு விருதுகளையும் வழங்க வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதில்லை.

அரசுத்துறைவிழாக்களில்நாட்டுப்புறநிகழ்ச்சி களை நிகழ்த்தும் வாய்ப்பு, சுற்றுலாத்துறை சார்பில் நிகழ்ச்சிகள், பொங்கல், சுதந்திரதினம், குடியரசு தின நிகழ்ச்சிகள் தொடங்கி, வெளிநாட்டு நிகழ்ச்சிகள் வரையில் திறமையான கலைஞர்களுக்கு வாய்ப்புகள் ஏற்படுத்தி தருகின்றன. இவை தான் அரசு சார்பில் இவர்களுக்குக் கிடைக்கும் ஒரே சலுகையாகும்.

நாட்டுப்புறக் கலைகளை வைத்திருப்போர், மக்கள் அதைக் வாழ்வாதாரமாக கைவிடும் போது கலையையும் கைவிட வேண்டிய சூழல் ஏற்படுகிறது.

கரகாட்டக்கலை முன்னேற்றங் காணச் சில புதிய வழிகளைக் கையாண்டு புத்துயிர் ஊட்ட வேண்டிய அவசியத்தை நன்கு உணரலாம்.

கரகம் கற்றுத் தருவதற்கான பள்ளிக் கூடங்களை உருவாக்க வேண்டும். செம்மையான பாடத்திட்டம் உருவாக்கி, முறைப்படி இக்கலையைக் கற்றுத்தர ஆவன செய்ய வேண்டும். கரக உடை மற்றும் துணைக் கருவிகளை வாங்கவும், தயாரிக்கவும் அரசு நிதி உதவியளிக்க வேண்டும். அரசின் கண்காணிப்பிலுள்ள அனாதை விடுதியிலுள்ள, ஆர்வமுள்ள பிள்ளைகளுக்கு இக்கலையைக் கற்றுத் தரலாம். கோயில் விழாக்களில், கரகம், காவடி முதலிய ஆட்டங்களைமரபு விதிப்படி நடத்த அரசு ஆவன செய்ய வேண்டும். தற்போதுள்ள கரகக் கலைஞர்களும், கரக ஆட்டத்தில் சில புதுமைகளையும் புகுத்த வேண்டும். பரத நாட்டியத்தில் பக்க வாத்தியக் குழுவோடு வாய்ப்பாட்டுக்காரரும் பாடுவது போல், நையாண்டி, மேளத்துடன் இனிதாகப் பாடக்கூடிய வாய்ப்பாட்டுக்காரரையும் கரக ஆட்டத்தில் பயன்படுத்தலாம். அப்போது தான், பாடல் இனிமையையும், சந்த சிறப்பையும் தனித்துணரச் செய்ய வாய்ப்பு ஏற்படும். வெறுமையான ஆட்டங்களாகவே அமையாமல் சில நிகழ்ச்சிகளைத் தழுவியாவது, சில கதைகளைத் தழுவியாவது ஓரங்க நாட்டிய நாடகம் போன்றும் தயாரித்து ஆடலாம். ஆட்டம் முழுவதற்கும் ஒரே உடை என்றில்லாமல், ஆட்டத்திற்குத் தக்கபடி உடை களிலும் புதுமை செய்து மாற்றி ஆடலாம். இவ்வாறு பல முயற்சிகளை மேற்கொண்டு கரகக் கலையை மேலும் வளர்க்கப் பாடுபட வேண்டும்.

**கரகக் கலைஞர்களின் வளர்ச்சிக்குச் செய்ய**

**வேண்டுவன**

கரகக் கலைஞர்களின் வளத்தையும், உற்சாகத்தையும் பொறுத்தே கரக ஆட்டத்தின் வளர்ச்சியும் அமையும். ஆதலால், கரகக் கலைஞர்களின் வளர்ச்சிக்கு வழி செய்வனவற்றை ஆராய வேண்டும்.

**1. வீட்டு வசதி**

கரகக் கலைஞர்கள் குடியிருப்பதற்காக விட்டுவசதி செய்துதர வேண்டும். அரசு குடிசை மாற்றுவாரியத்தின்சார்பில் இவர்களுக்கு வீடு கட்டித் தரலாம் அல்லது வீடு கட்டுவதற்காகக் கடனுதவி செய்யலாம். வீட்டுமனைப் பட்டாவும் வழங்கலாம்.

**2. வேலைவாய்ப்பு**

இக்கலைஞர்களுக்கு ஆண்டில் சில குறைவான மாதங்களுக்கு மட்டுமே வாய்ப்புக் கிடைகிறது. மீதியுள்ள மாதங்களில் துயரமான வாழ்க்கையையே வாழ்கிறார்கள்.அப்படிப்பட்ட மாதங்களில் இவர்களுக்கென அரசு ஏதேனும் ஒரு குடிசைத் தொழிலுக்கு வழிவகை செய்தால் நலமாக வாழ்வார்கள்.

**3. போதிய முதன்மை**

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், நாட்டுப்புறக் கலைஞர்களுக்குப் போதிய முதன்மை வழங்க வேண்டும். தேவையான இட ஒதுக்கீடு தரப்பட வேண்டும்.

**4. கோயில்களில் வேலை**

கரகம், காவடி, புரவி, நந்தி, மயில் முதலிய ஆட்டங்களைக் கற்றுள்ள கிராமியக் கலைஞர்களுக்குப், பொரிய கோயில்களில் நிரந்தர வேலை வாய்ப்பளித்து, கோயில் விழாக்களில் நாட்டுப்புற நிகழ்ச்சிகளையும் நடத்த ஏற்பாடு செய்யலாம்.

**5. அரசு விழாக்களில் பங்கு**

தமிழக அரசு விழாக்களில், மேன்மேலும் கிராமியக்கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

**6. கலாச்சாரப் பாரிவர்த்தனைகளில் பங்கு**

கலாச்சாரப் பாரிவர்த்தனைத் திட்டத்தின் கீழ் மற்றக் கலைகளைப் போலவே கிராமியக் கலைஞர்களையும் தொடர்ந்து வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

**7. பத்ம ஸ்ரீ பட்டம்**

'கலைமாமணி' என்ற பட்டத்தினை வழங்குவது போலவே 'பத்மஸ்ரீ' முதலான பட்டங்களைக் கிராமியக் கலைஞர்களுக்கும் வழங்க ஏற்பாடு செய்யலாம்.

**8. போக்குவரத்து வசதி**

விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளச் செல்லும் கிராமியக் கலைஞர்களுக்குத் தமிழக அரசு போக்குவரத்து வசதி களில் மேலும் சில சலுகைகளை வழங்கலாம்.

பரம்பரை பரம்பரையாக இந்தக்கலை ரத்தத்தில் ஊறிப்போனவர்களே அதைக் கைவிடும்போது, என்னைப் போன்றவர்கள் மட்டும் அதைத் தூக்கி நிறுத்திவிட முடியாது. கலை காப்பாற்றப்பட வேண்டும் என்றால், பொது மக்களின் ஆதரவு அதற்கு அவசியம் தேவை. தமிழர், தமிழர் என்று முழங்கும் நம் தமிழ்ச் சமூகம் தான் திருவிழாவில் சாமி ஊர்வலத்தின்போது, கேரளத்துச் செண்டை மேளத்தைஅழைத்து வந்து, நிகழ்ச்சி நடத்தும் அளவுக்குக் கலாச்சார அடையாளங்களை இழந்து நிற்கிறது. உள்ளூர் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு வாய்ப்பளிப்பது ஏதோ சில கலைஞர்களையும் கலையையும் வாழ வைப்பது, நம்முடைய கலாச்சாரத்தைப் பாதுகாப்பதாக அமையும்.

**முடிவுரை**

கரகக் கலைஞர்கள் கல்வி, தொழில், பொருளாதாரம், சமூகப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் போதிய முன்னேற்றங் காணவில்லை. பெரும்பாலோர் கல்வியறிவு இல்லாதவர்களாகவே இருக்கின்றனர். கரகாட்டக்கலையில் பெண்கள் பல இன்னல்களை சந்தித்தே வாழ்கின்றனர். அவர்களுக்கென்று மாியாதை, மதிப்பு என்று எதுவும் கிடையாது. கண்காட்சிப் பொருளாகப் பார்க்கும் அவல நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். தஞ்சை வட்டாரத்தில் கரகாட்டக் கலைஞர்கள்

நிறைய பேர் உள்ளனர். இவர்கள் இக்கலையின் மீது அதீத ஈடுபாடு கொண்டுள்ளனர். ஆட்டக் கலைஞர்களில் இருபாலர் எண்ணிக்கையில் பட்டுக்கோட்டை வட்டாரத்தில் சுமார் 20 பேர்கள், வலங்கைமான் மாவட்டத்தில் 250 பேர்கள் கும்பகோணம் வட்டாரத்தில் 200 பேர்கள் மற்றும் பிற பகுதிகளிலும் உள்ளனர். கரகாட்ட கலைஞர்களுக்கு அரசு எந்த சலுகை களையோ, வறுமானம் ஈட்டுவதற்கேற்ப வாய்ப்புகளையோ தருவதாகத் தொயவில்லை. கரகக் கலைஞர்கள் இசைத்தட்டுகளில் வெளியாகியுள்ள பக்திப்பாடல்களையும் பாடிக் கொள்கின்றனர்.

**பார்வை நூல்கள்**


1. இராமநாதன் அறு. முனைவர், நாட்டுப் புறக்கலைகள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்,1982.
2. அழகப்பன். அறு, நிழ்த்துக்கலைகள், கழக வெளியீடு, சென்னை,1973.
3. தமிழவன், நாட்டுப்புறக் கலைகள், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1979.
4. நடராசன்.தி, கரகாட்டக் கலைஞர்களின் வாழ்வியல் ஆய்வு, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை,1990)
5. குணசேகரன் கே.ஏ, முனைவர் குறவன் குறத்தி ஆட்டம், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2005
6. புலியூர் கேசிகன். சிலப்பதிகாரம் (தெளிவுரை), பாரி நிலையம், சென்னை, 2017.
7. தஞ்சை மாவட்ட கரகாட்டக் கலை கஞர்களின் கள ஆய்வுத் தரவுகள்